பா. பொன்னையா, இ.ஆ.ப.,
ஆணையர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி
இயக்ககம்
பனகல் மாளிகை, சைதாப்பேட்டை
சென்னை –15

மாவட்ட ஆட்சித்தலைவர்
அனைத்து மாவட்டங்கள்.
(சென்னைநீங்கலாக)

ந.க.எண். 26079/2024/ பாரா.2.2 நாள். 07.02.2025

பொருள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை – ஊரக பகுதிகளில் தொழிற்சாலை அமைப்பது– அனுமதி அளித்தல் அறிவுரை வழங்குதல்–தொடர்பாக

பார்வை அரசாணை நிலை எண். 170, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா. 2) துறை, நாள். 12.11.2024

பார்வையில் காணும் அரசாணை மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

பார்வையில் காணும் அரசாணையின்படி ஊராட்சிப் பகுதிகளில் தொழிற்சாலை அமைப்பதற்கு அனுமதி அளித்தல் தொடர்பான விதிகள் தமிழ்நாடு அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

ஊரகப்பகுதிகளில் தொழிற்சாலை அனுமதி பெறுவதற்கு பார்வையில் காணும் அரசாணையின்படி கீழ்க்கண்ட நடவடிக்கைகளை தொழிற்சாலை உரிமையாளர்கள்/பங்குதாரர்கள் மேற்கொள்ள வேண்டும்.

படிநிலை1:

தொழிற் சாலை உரிமையாளர்கள் / பங்குதாரர்கள் தொழில்தொடங்க / தொழிற்சாலை அமைக்க படிவம் 1 –ல் கண்ட விவரங்களை பூர்த்தி செய்து மாவட்ட ஆட்சியருக்கு சமர்ப்பிக்க வேண்டும்

இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

I. தனிநபர் குறித்த ஆவணங்கள்

1. ஓட்டுநர் உரிமம்
2. வங்கி கணக்கு புத்தகம்
3. வாக்காளர் அடையாள அட்டை
4. ஆதார்கார்டு
5. கடவுசீட்டு
6. பான்கார்டு (PAN)

மேற்கண்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினைப் படிவம் 1–ல் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

II. தொழிற்சாலை குறித்த ஆவணங்கள்

1. சொத்து வரி ரசீது
2. நில உடமை பத்திரம் / பட்டா / வாடகை ஒப்பந்தம் போன்ற நில உடமை ஆவணங்கள்
3. தொழிற்சாலை அமைத்தல் குறித்த பொறியாளரின் வரைபடம்
4. இயந்திரங்களின் மின் திறன் குறித்த அறிக்கை ஆகியவைகளை படிவம் 1–ல் பூர்த்தி செய்து வழங்கவேண்டும்

- தமிழ்நாடு அரசு கட்டிட விதிகளை பின்பற்றி தொழிற்சாலை அமைக்க வேண்டும். மேலும் நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் / சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தினரால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட வேண்டும்.
- விற்பனை மற்றும் சேவை வரி , வணிக வரித்துறையின் மூலம் வழங்கப்படும் GST எண் விவரங்கள் இணைக்க வேண்டும்.
- தீயணைப்பு மற்றும் மீட்புத்துறை வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி தொழிற்சாலையில் கருவிகள் / இயந்திரங்கள் வைத்திருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் படிவம் 2–ல் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

படிநிலை 2:

பெரு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் விண்ணப்பத்தின் மீது அனுமதி அளிக்கப்படும் நேர்வில் கள ஆய்வு தேவைப்படின் மாவட்ட ஆட்சித்தலைவரோ / மாவட்ட ஆட்சித்தலைவரால் நியமிக்கப்படும் உதவி இயக்குநர் நிலைக்கு குறையாத அலுவலர் கள ஆய்வு செய்ய வேண்டும்.

சிறு மற்றும் குறு நிறுவனங்களின் விண்ணப்பத்தின் மீது அனுமதி அளிக்கப்படும் நேர்வில் கள ஆய்வு தேவைப்படின் வட்டார வளர்ச்சி அலுவலர் நிலைக்கு குறையாத அலுவலர் கள ஆய்வு செய்ய வேண்டும்.

விண்ணப்பதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் விவரங்கள் ஏழு நாட்களுக்குள் சரிபார்க்கப்பட வேண்டும், மேலும் தவறுகள் சுட்டிகாட்ட பெற்றால் அதை ஏழு நாட்களுக்குள் தொழிற்சாலை உரிமையாளர் சரி செய்ய வேண்டும்.

கீழ்கண்ட விவரங்களை ஆய்வுகள் மேற்கொள்ளும் போது கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்:

- அனைத்து துறைகளின் வழிகாட்டு நெறிமுறைகளையும் சரியாக பின்பற்றபட்டுள்ளதா எனவும் தொழிற்சாலை அமையவுள்ள இடம் குறித்தும் ஆய்வு செய்ய வேண்டும்
- பொதுமக்களுக்கு வாழ்வாதார பாதிப்பு மற்றும் இடையூறு உள்ளதா என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும்.
- நீர்நிலை புறம்போக்குகள், மற்றும் ஆட்சேபணை புறம்போக்கு நிலங்களில் தொழிற்சாலை அமைய உள்ளதா என்பதை ஆய்வு செய்து அதன் விவரங்களை படிவம் 3–ல் பூர்த்தி செய்து மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அனுப்ப வேண்டும்.

படிநிலை 3:

விண்ணப்பங்கள், படிவம் 1 மற்றும் படிவம் 2 ஆகியவை மாவட்ட ஆட்சித்தலைவரால் சரி பார்க்கப்பட்டு, ஆய்வு அலுவலரின் குறிப்பு ஆகியவற்றின் மீது நிறைவு ஏற்படின் அனுமதி அளிக்கலாம் அல்லது நிறைவு ஏற்படாத பட்சத்தில் மாவட்ட ஆட்சித்தலைவரே கள ஆய்வு செய்யலாம்.

படிநிலை 4:

பெரு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் விண்ணப்பங்கள் உதவி இயக்குநரால் சரி பார்க்கப்பட்டு நிறைவு ஏற்பட்டால் 30 நாட்களுக்குள் மாவட்ட ஆட்சித்தலைவரால் அனுமதி தர வேண்டும். நிறைவு ஏற்படாவிடில் மாவட்ட ஆட்சித்தலைவர் தொழிற்சாலை அனுமதி விண்ணப்பத்தை நிராகரிக்கலாம்.

சிறு மற்றும் குறு நிறுவனங்களின் விண்ணப்பங்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆய்வு செய்து நிறைவு ஏற்பட்டால் 30 நாட்களுக்குள் மாவட்ட ஆட்சித்தலைவரால் அனுமதி தர வேண்டும். நிறைவு ஏற்படாவிடில் மாவட்ட ஆட்சித்தலைவர் தொழிற்சாலை அனுமதி விண்ணப்பத்தை நிராகரிக்கலாம்

படிநிலை 5

கள ஆய்வில் படிவம் 1 மற்றும் 2 சரிபார்க்கப்பட்டு அதில் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் யாவும்ச ரியானதாகவும், திருப்தியுடையதாகவும் இருக்குமென கருதினால், பார்வையில் கண்டுள்ள அரசாணையின்படி விண்ணப்பதாரரால் கட்டணம் செலுத்த கேட்பு அனுப்பப்படும்.

| Sl. No. | Category | Built-up Area Fee per Sq. meter (Rs.) | Basic amenities Development charges to the Village Panchayats (Rs.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | Micro | Rs 150/- | 2% of Investment in Plant & Machinery or equipment as mentioned in FORM 1 |
| 2 | Small | | 5,00,000/- |
| 3 | Medium | | 7,50,000/- |
| 4 | Other or large Industry | | 10,00,000/- |

விண்ணப்பதாரரால் கட்டணம் உரிய தலைப்பில் செலுத்தப்பட்டதை உறுதி செய்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தொழிற்சாலை அனுமதி இறுதி ஆணை வழங்கப்படும்.

படிநிலை6:

படிவம் 4–ல் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆணையின் மீது ஆட்சேபணை இருப்பின் தொழிற்சாலை உரிமையாளர் / பங்குதாரர் மேல்முறையீட்டிற்கு ஊரக வளர்ச்சி ஆணையரை அணுகலாம்.

படிநிலை7:

45 நாட்களுக்குள் விண்ணப்பங்களுக்கு அனுமதி அல்லது ஆட்சேபணை தெரிவிக்காமல் மாவட்ட அலுவலகத்தில் நிலுவையில் இருந்தால் தொழிற்சாலை அனுமதி விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டதாகக் கருதப்படும்.

ஓம்/...பா.பொன்னையா,
ஆணையர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி

ஆணையருக்காக

7/2/25

நகல்–
உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
அனைத்து மாவட்டம்.
(உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)